**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர்: மலர்விழி**

**தேதி: 26.09.2025 நேரம்: மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

பெண்களை மையமாக கொண்ட பல திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதால், சமூகத்தின் அனைத்து பிரிவினரும் பயன்பெற்று வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசின் பல்வேறு முயற்சிகளால், விண்வெளித் துறையில் இந்தியா, முன் எப்போதும் இல்லாத உயரங்களை எட்டி உள்ளது.

வீட்டு உபயோகம், மற்றும், மாணவர்களுக்குத் தேவையான பல்வேறு பொருட்கள், மற்றும் சேவைகள் மீதான வரிக் குறைப்பினால், மக்கள் மீதான வரிச் சுமை கணிசமாக குறைந்துள்ளது.

உற்பத்தி உட்பட எல்லாத் துறைகளிலும், தரத்தை உறுதிப்படுத்தினால் மட்டுமே, நல்ல எதிர்காலம் சாத்தியமாகும் என்று, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கூறியுள்ளார்.

----------------------

*மோடி பீகார் (19)*

பெண்களை மையமாக கொண்ட பல திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதால், சமூகத்தின் அனைத்து பிரிவினரும் பயன்பெற்று வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று பீகார்

மாநிலத்திற்கான, முதலமைச்சரின் மகளிர் வேலை வாய்ப்புத் திட்டத்தையும், இத்திட்டத்தின் கீழ், பீகார் மாநிலத்தின் பல்வேறு பகுதகிளைச் சேர்ந்த 75 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்களின் வங்கிக் கணக்கில் தலா 10 ஆயிரம் ரூபாய் செலுத்தும் பணிகளையும், இன்று புதுடெல்லியில் இருந்து காணொளிக் காட்சி மூலம் அவர் தொடக்கி வைத்தார். 11 ஆண்டுகளுக்கு முன்னர் தொடக்கப்பட்ட ஜன் தன் திட்டமே, பீகார் மாநில அரசின் புதிய திட்டத்திற்கு ஆதாரம் எனவும், ஜன் தன் வங்கிக் கணக்குகள் மூலமாகவே, தற்போது பயனாளிகளுக்கு, நேரடி ரொக்க மானியம் வழங்கப் படுவதாகவும் அவர் கூறினார். நாட்டில் 3 கோடி பெண் தொழில் முனைவோர்களை உருவாக்கும் இலக்குடன் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும், ஏற்கனவே 2 கோடிக்கும் மேற்பட்ட பெண் தொழில் முனைவோர், கிராமப்புறங்களில் உருவாகி இருப்பதற்கு முத்ரா, ட்ரோன் தீதி போன்ற திட்டங்களே காரணம் என்றும் பிரதமர் தெரிவித்தார். புதிய திட்டத்தின் கீழ், பீகார் மாநிலத்தில் குறைந்தபட்சம், வீட்டிற்கு ஒரு பெண் வேலை வாய்ப்பு பெறுவதால், சமூகத்தில் செல்வச் செழிப்பு பரவலாகும் என்று, அவர் மேலும் குறிப்பிட்டார்.

-----------------------

*சேவா சப்தாஹ்- விண்வெளி* 1 (6)

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, **மக்கள் சேவை- நல்லாட்சி** என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில், நாட்டில் மாற்றங்களையும் முன்னேற்றத்தையும் கொண்டு வர, அயராது உழைத்து வருகிறது. அரசின் பல்வேறு முயற்சிகளால், விண்வெளித் துறையில்

இந்தியா, முன் எப்போதும் இல்லாத உயரங்களை எட்டி இருப்பது குறித்து, இன்று, சேவைத் திருவிழா என்னும், இந்த சிறப்பு தொடரில் காண்போம். ……….

**(வாய்ஸ்)**

*சேவா சப்தாஹ்- விண்வெளி* 2 (6)

**(வாய்ஸ்)**

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், பரந்த விண்வெளி உடனான இந்தியாவின் தொடர்புகள், கற்பனையை மிஞ்சிய அபார சாதனைகளையும், அசாதாரண கண்டுபிடிப்புகளையும் எட்டி உள்ளன. இவ்வாண்டு தேசிய விண்வெளி தினதன்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியது போல, விண்வெளித் துறையில் சாதனை மேல் சாதனை படைப்பது, இந்தியாவின் இயல்பாகவே மாறியுள்ளது….

**(வாய்ஸ்-மோடி 1 )**

*சேவா சப்தாஹ்- விண்வெளி* 3 (14)

செமி- க்ரையோஜெனிக் எஞ்சின் உட்பட, அதி முக்கிய விண்வெளித் தொழில்நுட்பங்களில் இந்தியா, துரிதமான முன்னேற்றங்களை எட்டி உள்ளது. செயற்கைக் கோளின் ஒருபகுதியை விண்வெளியில் வைத்தே மற்றொரு பகுதியுடன் இணைத்துப் பிரிக்கும் தொழில்நுட்ப ஆற்றல் பெற்றுள்ள, உலகின் 4ஆவது நாடாக, கடந்த ஜனவரியில் இந்தியா உருவெடுத்தது. குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லாவின் வெற்றிகரமான விண்வெளிப் பயணம், இந்திய விண்வெளி வீரர் ஒருவருடன், இந்திய

விண்கலம் ஒன்றை விண்ணுக்கு அனுப்புவதற்கான ககன்யான் திட்டத்தின் வெற்றிக்கு, முதல்படியாகவே அமைந்துள்ளது. 2035ஆம் ஆண்டிற்குள், இந்திய விண்வெளி நிலையம் ஒன்றை, விண்வெளியில் அமைக்கவும் திட்டமிடப் பட்டுள்ளது. இந்த எல்லா வெற்றிகளுக்கும், விண்வெளி தொழில்நுட்பத்தின் வளர்ச்சியில், தனியார் துறையினர் உட்பட அனைத்துத் தரப்பினரையும் ஈடுபடுத்தும் வகையிலான அரசின் கொள்ளைத் தலையீடுகளே காரணம். இதுகுறித்து பிரதமர் திரு. நரேந்தி மோடி பேசுகையில்.......

(வாய்ஸ்-மோடி 2)

*சேவா சப்தாஹ்- விண்வெளி 4 (7)*

இந்தியாவில், வேளாண்மை, மீன்வளம், பேரிடர் நிர்வாகம் உள்ளிட்ட துறைகளுக்கான செயற்கைக் கோள் ஆதரவு, உள்கட்டமைப்புத் துறையில், புவி-விண்ணியல் தரவுகள் மூலமான திட்டமிடல் போன்ற புதிய வசதிகளால், அனைத்துப் பிரிவு மக்களின் வாழ்க்கை எளிதாகி வருகிறது. பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையின் கீழ், விண்வெளித் துறையில் இந்தியாவின் லட்சியங்கள், அதிநவீன தொழில்நுட்பங்களை, நாட்டின் முன்னேற்றத்துடன் ஒருங்கிணைக்கும் வகையில், மறு வரையறை செய்யப் பட்டுள்ளன.

----------------------

சோனோவால் (7)

கப்பல் துறைக்குத் தேவையான பணியாளர்களை வழங்கும் உலகின் 3ஆவது பெரிய நாடாக இந்தியா உருவெடுத்து இருப்பதாக மத்திய கப்பல் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார். இன்று சென்னை அருகே உத்தண்டியில், இந்திய கடல்சார் பல்கலைக் கழகத்தின் 10ஆவது பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், கப்பல் துறையின் நிதித் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், 20 ஆயிரம் கோடி ரூபாய் அடிப்படை நிதி உருவாக்கப் பட்டுள்ளதாக தெரிவித்தார்.

-----------------------

*ஜிஎஸ்டி-எழுது பொருட்கள் 1 (8)*

நாட்டில் தற்போது அமலாகி வரும், அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள், மறைமுக வரிக் கட்டமைப்பை எளிமைப் படுத்துவதில், முக்கிய நடவடிக்கையாக அமைந்துள்ளன. இதுவரை 4 அடுக்குகளாக இருந்த ஜிஎஸ்டி கட்டமைப்பு, 5 சதவிகிதம், 18 சதவிகிதம் என, 2 அடுக்குகளாக குறைக்கப் பட்டுள்ளது. வீட்டு உபயோகம் மற்றும், மாணவர்களுக்குத் தேவையான பல்வேறு பொருட்கள், மற்றும் சேவைகள் மீதான வரிக் குறைப்பினால், மக்கள் மீதான வரிச் சுமை கணிசமாக குறைந்துள்ளது. இதுகுறித்து ஒரு செய்தி தொகுப்பு....

**(வாய்ஸ்)**

*ஜிஎஸ்டி-எழுது பொருட்கள் 2 (15)*

<u>அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் கீழ், நோட்டுப் புத்தகங்கள், மற்றும், பென்சில்-ஷார்ப்பனர் உள்ளிட்ட எழுது</u>

பொருட்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப் பட்டுள்ளது. இதனால் இத்தகைய பொருட்களின் விலையும், மாணவர்கள் மீதன நிதிச் சுமையும் கணிசமாக குறைகின்றன. 2 ஆயிரத்து 500 ரூபாய்க்கு மிகாமல் விலை உள்ள காலணிகள் மீதும், இதேப்போல வரிக்குறைப்பு அமலுக்கு வந்துள்ளது. கல், மரம், மற்றும், உலோகச் சிலைகளும் 12 சதவிகித வரி அடுக்கில் இருந்து, 5 சதவிகித அடுக்கிற்கு மாற்றப்பட்டுள்ளன. வரி விகிதம் கணிசமாக குறைக்கப் பட்டுள்ளதால், சாதாரண மக்கள் இப்பொருட்களை வாங்குவது எளிதாகி இருப்பதுடன், உற்பத்தி அதிகரித்து, பொருளாதாரம் ஊக்கம் பெறும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். உள்ளூர் உற்பத்தியாளர்கள், கைவினைக் கலைஞர்கள், மற்றும், தொழில் துறையினருக்கு உதவும் வகையில், பொது மக்கள், சுதேசி பொருட்களை மட்டுமே வாங்கி பயன்படுத்த வேண்டும் என்றும், பிரதமர் திரு. நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

-----------------------

தரம்-கைலாஷ்நாதன் (18)

தொலைநோக்குப் பார்வை கொண்ட பிரதமர் திரு. நரேந்திர மோடியின் எல்லாத் திட்டங்களும், அனைத்து மக்களுக்கும், தரமான வாழ்க்கை, தரமான சேவை, மற்றும், தரமான பொருட்கள் கிடைப்பதை மையமாக கொண்டே செயல்படுத்தப் படுவதாக, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கூறியுள்ளார். நல்ல எதிர்காலத்திற்கான, நீடித்த வளர்ச்சி இலக்குகளை எட்டுவதில். தர உறுதிப்பாட்டின்

முக்கியத்துவம் என்பது குறித்து, சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினரின் பங்கேற்புடன், இந்திய தர நிர்ணய அமைவனம் சார்பில், புதுச்சேரியில் இன்று நடைபெற்ற மாநாட்டில், தலைமை விருந்தினராக அவர் கலந்து கொண்டு உரையாற்றினார். தொழிலக உற்பத்தி மட்டுமின்றி, கல்வி, உணவு-குடிநீர், மருத்துவம், சுற்றுச் சூழல் என அனைத்திலும், தரத்தை உறுதிப்படுத்தினால் மட்டுமே, நல்ல எதிர்காலம் சாத்தியமாகும் என்றும் அவர் வலியுறுத்தினார். தொழில் நிறுவனங்கள், ஆராய்ச்சி அமைப்புகள், கல்வி நிறுவனங்கள், நுகர்வோர் அமைப்புகள் உட்பட, அனைத்துத் தரப்பினரும் ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான், எல்லாத் துறைகளிலும் தரத்தை உறுதிப்படுத்த முடியும் என்றும், அவர் கூறினார். தர நிர்ணய அமைவனத்தின் தென்மண்டல முதுநிலை இயக்குநர் திரு. தயானந்த் உள்ளிட்டோர், இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

-----------------------

*ரங்கசாமி* (8)

அரியாங்குப்பம் பாரதியார் பல்கலைக் கூடத்தின் தாகூர் கலாச்சார வளாகத்தில், 7.33 கோடி ரூபாய் மதிப்பீட்டில், விடுபட்ட கட்டிடப் பணிகள், மற்றும், திறந்தவெளி கலையரங்கம் அமைக்கும் பணிகளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி இன்று, பூமி பூஜை செய்து தொடக்கி வைத்தார். சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன், கலை-பண்பாட்டுத் துறை

அமைச்சர் திரு. திருமுருகன், சட்டமன்ற உறுப்பினர் திரு. பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

-----------------------

*புதுச்சேரி சூரிய வீடு (13)*

பிரதமரின் சூரிய வீடு இலவச மின்சாரத் திட்டம் குறித்து, புதுச்சேரியில் நாளை 13 இடங்களில், விழிப்புணர்வு முகாம்கள் நடைபெற உள்ளன. திரு.வி.க அரசு உயர்நிலைப் பள்ளி, பூமியான்பேட்டை மின்துறை இளநிலைப் பொறியாளர் அலுவலகம், காலாபட்டு பல்நோக்குக் கூடம் உள்ளிட்ட இடங்களில் இதில் அடங்கும். சூரிய வீடு இலவச மின்சாரத் திட்டத்தின் நன்மைகள் குறித்தும், வீட்டு மேற்கூரையில் சூரிய சக்தி மூலமான மின் உற்பத்தி வசதிகளை நிறுவிப் பராமரிக்க, அரசு வழங்கும் உதவிகள் குறித்தும், இம்முகாம்களின் போது பொது மக்களுக்கு எடுத்துக் கூறப்படும். புதுச்சேரியில் இதுவரை, ஆயிரத்து 644 வீடுகளில், மொத்தம் 11.7 கோடி ரூபாய் மானியத்துடன், **மேற்கூரை சூரிய மின் உற்பத்தி வசதிகள்** நிறுவப் பட்டுள்ளதாகவும், இதில் 825 வீடுகளின் மின் நுகர்வு, பூஜ்யம் யூனிட்டாக குறைந்து இருப்பதாகவும், மின் துறை செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

-----------------------

*கிரிக்கெட் (8)*

ஆசியக் கோப்பைக்கான 20 ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரில், இன்று இரவு 8 மணிக்கு, துபாயில் நடைபெறும் போட்டியில், இந்தியா-

இலங்கை அணிகள் மோத உள்ளன. இவ்விரு அணிகளில், இந்தியா ஏற்கனவே இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. பாகிஸ்தான் அணி, நேற்று இரவு நடைபெற்ற போட்டியில், பங்களாதேஷ் அணிக்கு எதிராக வெற்றி பெற்று, இறுதிப் போட்டிக்குள் நுழைந்துள்ளது. இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இறுதிப் போட்டி, வரும் ஞாயிற்று கிழமை நடைபெறும்.

-----------------------

வானிலை (13)

இன்று வங்கக் கடலில் நிலவும் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, காற்றழுத்தத் தாழ்வு மண்டலாக வலுப்பெற்று, நாளைக் காலை, தெற்கு ஒடிசா, மற்றும், வடக்கு ஆந்திரக் கரையை கடக்கக் கூடும் என எதிர்பார்க்கப் படுகிறது. மேற்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்றைய தினம், நீலகிரி, தேனி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களிலும், கோவை-நெல்லை மாவட்ட மலைப் பகுதிகளிலும், ஓரிரு இடங்களில் கன மழைக்கு வாய்ப்பு இருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல், மிதமான மழை இருக்க க் கூடும் என்றும், அக்டோபர் 2ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, குமரி மாவட்டம் திற்பரப்பு உள்ளிட்ட

இடங்களில், தலா 8 செ.மீ மழை பதிவாகி உள்ளது.  புதுச்சேரியில் 7 செ.மீ மழை பெய்துள்ளது.

-----------------------

*விமானப் பை□ (7)*

இந்திய விமானப் படையில்  கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக பயன்பாட்டில் இருந்த, MiG-21 ரக போர் விமானம், இன்று பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் முன்னிலையில்,  முறைப்படி, விமானப் படையில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட்டது. 1963ஆம் ஆண்டு, இந்திய விமானப் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட MiG-21 ரகப் போர் விமானங்கள், குறிப்பாக 1971ஆம் ஆண்டு, இந்தோ-பாகிஸ்தான் போரில், முக்கிய பங்காற்றி, எதிரிகளுக்கு கடும் சேதங்களை ஏற்படுத்தியதும் குறிப்பிடத்தக்கது.

-----------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பெண்களை மையமாக கொண்ட பல திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதால், சமூகத்தின் அனைத்து பிரிவினரும் பயன்பெற்ற வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசின் பல்வேறு முயற்சிகளால், விண்வெளித் துறையில் இந்தியா, முன் எப்போதும் இல்லாத உயரங்களை எட்டி உள்ளது.

வீட்டு உபயோகம், மற்றும், மாணவர்களுக்குத் தேவையான பல்வேறு பொருட்கள், மற்றும் சேவைகள் மீதான வரிக் குறைப்பினால், மக்கள் மீதான வரிச் சுமை கணிசமாக குறைந்துள்ளது.

உற்பத்தி உட்பட எல்லாத் துறைகளிலும், தரத்தை உறுதிப்படுத்தினால் மட்டுமே, நல்ல எதிர்காலம் சாத்தியமாகும் என்று, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் கூறியுள்ளார்.